20317-

உ

கடவுள்துணை

மாறன் பொறையனார்

அருளிச்செய்த

# ஐந்திணையைம்பது

மூலமும் உரையும்.

சேதுசம்ஸ்தான வித்துவானும்,

செந்தமிழ்ப் பத்திராசிரியருமாகிய

**ரா. இராகவையங்காரால்**

பரிசோதிக்கப்பட்டன.

செந்தமிழ்ப் பிரசுரம்—க.

இரண்டாம் பதிப்பு.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1912.

[இதன் விலை அணா—3]

உ

கடவுள்துணை

மாறன் பொறையனார்

அருளிச்செய்த

# ஐந்திணையைம்பது

மூலமும் உரையும்.

சேதுசமஸ்தான வித்துவானும்,

செந்தமிழ்ப் பத்திராசிரியருமாகிய

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன.

செந்தமிழ்ப் பிரசுரம்—க.

இரண்டாம் பதிப்பு.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

1912.

[இதன் விலை அணா—3]

ஸ்ரீ:

கடவுள் துணை.

# முகவுரை.

ஐந்திணையைம்பது என்பது கடைச்சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கீழ்க்கணக்கு நூல்களாவன;— ௧-நாலடி, ௨-நான்மணிக்கடிகை, ௩-இனியது நாற்பது, ௪-இன்னாநாற்பது, ௫-களவழிநாற்பது, ௬-கார்நாற்பது, ௭-ஐந்திணையைம்பது, ௮-ஐந்திணையெழுபது, ௯-திணைமொழியைம்பது, ௧௦-திணைமாலை நூற்றைம்பது, ௧௧-திருக்குறள், ௧௨-திரிகடுகம், ௧௩-ஆசாரக்கோவை, ௧௪-பழமொழி, ௧௫-சிறுபஞ்சமூலம், ௧௬-முதுமொழிக்காஞ்சி, ௧௭-ஏலாதி, ௧௮-கைந்நிலை என இவை; இதனை,

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி —மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்னும் வெண்பாவினு லறிந்துகொள்க. நானாற்பதைந்திணை என்புழி நானாற்பது, நாலைந்திணை எனவுரைக்க. கீழ்க்கணக்கு, நாலடி......மெய்ந்நிலைய காஞ்சியோடு ஏலாதி கைந்நிலையவாம் என்ப: என்க. கணக்கு-மேற்கணக்கு, கீழ்க் கணக்கு என இருவகைப்படும். ஐம்பது முதல் ஐந்நூறிறுதியாக ஐவகைப்பாவானும் வருவது மேற்கணக்கெனப்படும். அவ்வகை யெண்ணில் அறம்பொருளின்பங்களைப்பற்றி வெண்பா ஒன்றுனே வருவது கீழ்க்கணக்கெனப்படும். இவற்றிற்கிலக்கணம்;—

"மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே"

---

* இவ்வெண்பா, "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால் கோவை பழமொழி—மாமூல, மின்னிலைய காஞ்சியுட னேலாதி யென், நன்னிலைய தாகுங் கணக்கு" என ஆழ்வார்திருநகரியிற் கிடைத்த பழையதோர் திருக்குறளுரை யேட்டுமுகத்து எழுதப்பட்டுள்ளது. இப்பாது ஐந்திணையென்பது ஐந்து திணை நூல்கள் என்க; அவை ஐந்திணையம்பது முதலிய நான்கும், கைந்நிலையும் ஆம்.

"மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே"

"அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் றொகுப்பது மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே"

"ஐம்பது முதலா வைந்நூ றீறா
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்"

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்"

எனவரும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களா னுணர்க. கீழ்க்கணக்கிற்கு வெண்பாவேயன்றி அதனினமும் ஆம் என்பது முதுமொழிக் காஞ்சியில் "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா—மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" என வெண்செந்துறை வந்தவாற்றானறிக. மேற்கணக்கிற்கே "ஐம்பது முதலா வைந்நூ றீறா" எனவும் "பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா" எனவும் சிறுமைக்கும் பெருமைக்கும் எண்வரையறை கூறிக், கீழ்க்கணக்கிற்கு "அவ்வகை யெண்பெறின்" எனவும் "அடி நிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனவும் ஓதினமையாற் கீழ்க்கணக்குச் சிறுபான்மை ஐம்பதிற்குறைந்தும் ஐந்நூற்றின் மிக்கும் வருமெனக்கொள்க. இனியது, இன்னா, களவழி, கார்நான்கும் ஐம்பதிற் குறைந்துவந்தன. முப்பால் ஐந்நூற்றின் மிக்கு வந்தது. இக்கீழ்க்கணக்கு நூல்களையே தாயபனுவல் என்னும் பெயராற் கூறுவர் எனவும், இவை அறம்பொருளின்பமென்னு மூன்றற்கு மிலக்கணஞ்சொல்லுவ எனவும், வேறிடையிடை அவையன்றியுந் தாஅய்ச் செல்வதுமுண்டெனவும், இச்செய்யுட்கள் அடிநிமிராது இரண்டடிமுதல் ஆறடியிறுதியாகவருவன எனவும், அவை எழுத்தினனகன்று காட்டாது சில எழுத்தினான் வருவன எனவும், அவையெண்ணுஞ் சுருங்கிச் சிலவாகவருவன எனவும், "வனப்பியறானே"

என்னுஞ்செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரைத்தவாற்றானுணர்ந்துகொள்க. "சின்மென் மொழியாற் றாய பனுவலொடு, அம்மை தானே யடிநிமிர் பின்றே" என்ற தொல்காப்பிய நெறியேபோற்றி பன்னிருபாட்டியற்கண்ணும் "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனக் கூறியதூஉங் காண்க. இவ்வைந்திணையைம்பது அறம்பொருளின்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் இன்பப்பகுதிபற்றிச் சிலவாய மெல்லிய சொற்களால் நான்கடியினேறாமல் ஐம்பதாய் எண்ணுச் சுருங்கி வெண்பாவான் வந்தமையாற் கீழ்க்கணக்காயவாறு கண்டுகொள்க.

இஃது அவ்வின்பப்பகுதிக்குரிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஐவகை யொழுக்கங்களையும் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்னும் பெயரான் ஐந்திணையாகவைத்து ஒவ்வொரு திணைக்கும் பப்பத்து வெண்பாவாகக் கூறுதலான் ஐந்திணையைம்பது எனப் பெயர்பெற்றது. இந்நூலுள் ஐந்திணையையும் முல்லை முதலாக நெய்தலிறுதியாக வைத்தது பெரும்பான்மையும் தொல்காப்பியத்து,

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்னும் அகத்திணையியற் சூத்திரத்துக் கூறப்பட்ட முறையே பற்றியதாகும். மற்று ஈண்டோதப்பட்ட பாலையையும் உடன்வைத்த தென்னையெனின்;—அது "நிலம் நான்கேயாதலாற் பாலைக்கு நிலமின்றெனின், அற்றன்று: 'புணர்தல் பிரிதல் இருத்த லிரங்க லூட லிவற்றி னிமித்த மென்றிவை, தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே' (தொல். பொ. அகத். கச) என நால்வகை நிலத்துங்கொண்ட உரிப்பொருட்கிடையே பிரிதலும் ஓர் உரிப்பொருளாக ஆசிரியர் கொண்டார், அப்பிரிவு நான்கு நிலத்திடையும் பொதுவாய் மயங்கிவருமென்று கருதி; ஆதலின், ஈண்டு பாலைத்திணையையுந் திணையாக ஆசிரி

யர் நல்லந்துவனார் கோத்தாரென்று கூறுக" என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கலித்தொகை முகத்துக் கூறியவாற்றானுணரப்படும். இனி இம்முறைவைப்பிற்குக் காரணம் வருமாறு;—இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம்பற்றிய ஒழுக்கமாதலின் கற்பொடுபொருந்திக் கணவன்சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல் மகளிரதியற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது. புணர்தலின்றி இல்லறம் நிகழாமையின் புணர்தற்பொருட்டாகிய குறிஞ்சி அதன்பின் வைக்கப்பட்டது. புணர்ச்சிப்பின் ஊடனிகழ்தலின் அதன்பின் மருதம் வந்தது. அம்மருதத்து நிகழும் பரத்தையிற் பிரிவுபோலப் பிரிவொப்புமை நோக்கிப்பிரிதலாகிய பாலை அதன் பின்னையது. பிரிவுபற்றி உளதாகும் இரங்கலாகிய நெய்தல் அப்பாலைக்குப் பின்னின்றது என்பது. இவ்வைந்திணை இயல்புகள் பலவற்றை இந்நூல் சுருங்கவிளங்க வுரைக்கும். இந்நூற்பாயிரத்துள் "ஐந்திணை யைம்பது மார்வத்தி னோதாதார், செந்தமிழ் சேரா தவர்" எனக்கூறியவாற்றானே இதன் பெருமை நன்கறியத்தக்கது. இதன்கண்ணுள்ள பாடல்கள் பல நச்சினார்க்கினியர் முதலிய நல்லாசிரியர்களாற் றம்முரைகளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் மாறன்பொறையனார் என்பார். பாண்டியன் பெயரும் சேரன்பெயருமே இவர்க்குப்பெயராக இணைந்திருத்தலின் இவர் அவ்விருபேரரசர்க்கும் நட்பினராம் உரிமையுடையரோ என ஊகிக்கப்படுகிறார். மாறன்-பாண்டியன்; பொறையன்-சேரன். கோப்பெருஞ்சோழற்கும் பிசிராந்தையார் என்னும் புலவர்க்கும் உளதாகிய நட்புரிமையாற் பிசிராந்தையார் தம்பெயரைப் பிறர்க்குச்சொல்லும்பொழுது தம்பெயர் சோழனென்று அவ்வரசன்பெயரையே தம்பெயராகச் சொல்லியதனையும் ஈண்டைக்காராய்ந்துகொள்க. இதனைத் "தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர், பேதைச் சோழனென்னுஞ் சிறந்த, காதற் கிழமையு முடையன்" எனவரும் புறப்பாட்டான் (௨௧௫) அறிக. இவர் தந்நூல் முதற்செய்யுளிற் றிருமாலையும், முருகக்கடவுளையும், சிவபிரானையும் எடுத்தோதுதலான், இவர் வேதநெறிப்பட்ட ஒழுக்கினரென்பதும் அறியலாகும். இவரது சொற்பொருள் வழக்குக்களும், உவமைகளும், பிறவும் மற்றைக்கீழ்க்

கணக்கு நூல்களிலும் பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் திருச்சிற்றம்பலக்கோவையிலும் ஆங்காங்குக் காணலாகும். இந்நூற்கண்ணுள்ள வெண்பாக்கள் ஒவ்வொன்றன்பின்னும் தனித்தனியே கருத்துரையும் பொழிப்புரையும் உள்ளன. அவற்றை இயற்றினோர் பெயர் முதலியன ஒன்றும் புலப்படவில்லை. அவ்வுரைநடையினை ஆராயின் அவையும் முற்காலத்தனவாதல் தெளியப்படும். இவ்வுரைகளோடுகூடிய ஐந்திணையைம்பதுப் பிரதியிரண்டு இச்சங்கத்திற்குக் கிடைத்தன. இவை இம்மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் அக்கிராசனாதிபதியுமாகிய பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் நன்முயற்சியானே பெறப்பட்டன. இவற்றை உதவியபேருபகாரிகள் சென்னைவித்துவான்: மகா-ள-ள-ஸ்ரீ தி. செல்வக்கேசவராயமுதலியாரவர்கள் எம். ஏ., திருமயிலை வித்துவான்: மகா-ள-ள-ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்கள் என்னும் இவர்கள். இவ்விருபிரதிகளிலும் உள்ளவாறே இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

இதனுள் முல்லையில் "மின்னுமுழக்கும்" என்பது முதலாகப் "பிரிந்தவர்மேனி" என்பதிறுதியாக உள்ள வெண்பாக்களாறும் "அணிநிறமஞ்ஞை" என்பதுபோலப் 'பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச்சொல்லியது' ஆயிற் செவ்வனம் இயைவனவாகும். அவ்வாறன்றிப் பிரதிகளிற் 'பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது' எனவேயுள்ளது. தலைவியது ஆற்றாமைக்குக் காரணமாய காரும் மாலையும் சிறுகுறுமோசை முதலியனவும் தோழி கண்டுகேட்டுத் தானும் ஆற்றாளாய்க் கூறி ஆற்றுவித்தாளென ஒருவாற்கொள்ளவுமாமென்று கருதி அதனை யான் மாற்றத் துணிந்திலேன்.

இஃது இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று வெளியாகின்ற "செந்தமிழ்"ப் பத்திரிகைக்குரிய முதற்பிரசுரமாவது. இவ்வாறே இதுகாறும் அச்சிடப்படாமலுள்ள பொருளாற்பெரியவும் அளவாற் சிறியவும் ஆகிய பண்டையோருரைத்த தண்டமிழ்நூல்கள் பலவற்றை இச்செந்தமிழ் வாயிலாக வெளியிடக் கருதியிருத்தலின், அப்

பழைய ஏடுகளுடைய நல்லோர் அவற்றை இச்சங்கத்திற்கனுப்பியரு ளுமாறு அவரைப் பன்முறை வேண்டுகின்றேன்.

> 'அறிவ தறியு மறிவினர் கேண்மை
> நெறியே யுரையாதோ மற்று' (ஐந்திணையைம்பது-உரு.)

> 'மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தா
> ரொற்கங் கடைப்பிடியா தார்' (ஷை, சஅ.)

இங்ஙனம்,

ஸேதுஸம்ஸ்தானவித்வான்.

ரா. இராகவையங்கார்,

செந்தமிழ்ப் பத்திராசிரியர்.

# விஷயசூசிகை.

[எண்கள் பாட்டெண்கள்.]


அருவிநறவிரை கலந்திழிதல் ... ... ௧௩

அருவி யாடல் ... ... ... ௧௩-௧௫

அருவியாடிக் கண்சிவத்தல் ... ... ௧௫

அல்லகுறிப்படுதல் ... ... ... ௪௯

அழல்போலத் தாமரையவிழ்தல் ... ... ௨௫

அன்றில் செம்பூப்போலுஞ் சூட்டுடையது ... ௪௧

ஆயன் குழலோசை ... ... ... ௭

ஆனிரை ... ... ... ... ௭

இளவேனி லின்பம்பயத்தல் ... ... ௩௧

ஊடல் ... ... ... ... ௩0

கடம்பமர்ந்தான் ... ... ... ௧

கடல் ... ... ... ... ௪௪

களிறு பிடியைக் குளிப்பாட்டல் ... ... ௩௨

காடெறிந்து தினைவிளைத்தல் ... ... ௧௮

கார் ... ... ... ... ௧-௨-௩-௪

கிளிவாய் பவளம் போறல் ... ... ௩௩.

குதிரையைத் தேரிற்பூட்டல், மணியணிதல் ... ௫0

கூடலிழைப்பு ... ... ... ௪௩

கூடல் ... ... ... ... ௩0

கூந்தல் அரன்மணல் போல்வது ... ... ௨௭

கூந்தல் ஐவகை ... ... ... ௨௭

கூந்தல் வெண்மரல்போலத் திரிதல் ... ... ௨௭

கொற்சேரியிலூசிவிற்றல் ... ... ௨௧

சந்தனச்சாந்து ... ... ... ௨௪

சுரம் ... ... ... ... ௩௨

சுனையிற் சிறுநீரைப் பிணையுண்ணவேண்டிக் கலை
பொய்யே யுறிஞ்சுதல் ௩௮

சூரியன்-தேரோன் ... ... ... ௭
தலைவன் இரவின் வருதல் ... ... ௧௯
தலைவன் தேரூர்ந்து பரத்தையர் மனைக்குப்போதல் ௨௮
தலைவன் நறுமேனி ... ... ... ௩0
தலைவனும் தலைவியும் உடன்போதல் ... ௩௩
தலைவனைப் பிரிந்த மகளிர் கையிற்றொடி ஓடிவீழ்தல் ௩௬
தலைவி தலைவன் முயங்கிப் புடைபெயர் காலத்தும்
ஆற்றாளாதல் ... ... ... ௩௯
தழையணி ... ... ... ... ௧௪
தாழைப்பினது பூநறுவெள்ள சோறு வெண்ணெய் போறல் ௪௯
தினை காத்தல் ... ... ... ௧௨-௧௪
தென்றல் குளிரும் பருவத்து மினிதாதல் ... ௩0
தேர் ... ... ... ... ௨௬
தேர் போன வழியை நெண்டு சிதைத்தல் ... ௪௨
தோழியர் சூழ முற்றத்தில் விளையாடல் ... ௩௭
நடுகல் ... ... ... ... ௩௫
நலம்புனைதல் ... ... ... ௧௧
படைத்து மொழி கிளவி ... ... ௪௪
பாக்கம் ... ... ... ... ௧௨
பாகன் நால்பயிறல் ... ... ... ௧0
பாணன் ... ... ... ... ௨௧
பாணன் தலைவற்குத் தூதாய்த் திரிதல் ... ௨௨
பாலகன் குடுமி ... ... ... ௨௫
பாலையில் ஆறலைப்போர் ... ... ௩௪
பாலையில் வேட்டுவச்சாதி ... ... ௩௪-௩௫
பீர் ... ... ... ... ௨
புண்ணிற்குக் காரமிடுதல் ... ... ௨௪
புதுமணங்களின் மூழ்வொலித்தல் ... ... ௨௬
புன்னையரும்பு பல்லிமுட்டை போறல் ... ௪௩
புனத்தின்கட் களவொழுக்கம் ... ... ௧௧
பேய்த்தேரை நீரெனக் கருதல் ... ... ௩௯

பேய் நடுகல்நிழலிலுறங்கல் ... ... ௩௫
பேய் நிணந்தின்றல் ... ... ... ௩௫
பொருண்மேற் பிரிதல் ... ... ... ௩௫
மகளிர்க்குச் செல்சார்வு சொறுநர் ... ... ௯
மகளிர் கவுண்மிசைக் கையூன்றல் ... ... ௰
மகளிர் கற்பு ... ... ... ௰
மகளிரைத் தெய்வம் வருத்தல் ... ... ௨௰
மகளிர் பாவை, பந்து, கிளியுடனாடல் ... ௩௩
மகளிர் பாதங்களின் மேனி ... ... ௧௫-௪௫
மகளிர் மீனுணங்கல் கவர்ந்த புள்ளினையோப்புதல் ... ௪௭
மகளிராயம் ... ... ... ௩௩
மகளிர் வண்டலிழைத்தல் ... ... ௪௬
மகளிர் வண்டலைக் கடல் சிதைத்தல் ... ௪௪
மகளிர் வேங்கைப்பூக் கொய்தல் ... ... ௧௫
மல்லரை வென்றவன் ... ... ... ௧
மழலை ... ... ... ... ௨௫
மறியறுத்து உதிரந்தூவல் ... ... ௨௰
மாவேட்டம் ... ... ... ௧௪
மான்போன்ற மதர்த்தகண் ... ... ௧௩
மீனுணங்கல் ... ... ... ௪௭
முத்தினை விளக்காக விரும்பல் ... ... ௪௬
முத்து ... ... ... ... ௪௭-௪௮
முப்புரங்களை எய்தவன் ... ... ௧
முரசின் குரல்போற் காரிடித்தல் ... ... ௪
முரசு ... ... ... ... ௪
முருக்கரும்பு வேங்கைப் பூப்போறல் ... ௩௧
முல்லைமுகை போன்ற பல் ... ... ௩
மொழி பால்போறல் ... ... ௩௩
யானை புலிக்கு வெருவுதல் ... ... ௧௬
வதுவை விழவு ... ... ... ௨௬
வம்பமழை ... ... ... ௯

வயல் செய்தல் ... ... ... ௨௬

வலைவீசி மீன்பிடித்தல் ... ... ௪௭

வள்வார்முரசு ... ... ௪

வள்ளிகள் ... ... ௮

வளை ... ... ௨௬

வளைத்தோள் ... ... ௪௫

வாட்கள் ... ... ௯, ௨௮, ௩௪

வெண்பாவில் ஐஞ்சீரடி வந்தது ... ... ௩௧

வெறியாடல் ... ... ௨௦

வேங்கைப்புலி ... ... ௧௬

வேங்கைப்பூ ... ... ௧௧

வேல்போலமின்னுதல் ... ... ௧

வேலன் ... ... ௨௦

கடவுள் துணை.

மாறன்பொறையனார்

அருளிச்செய்த

# *ஐந்திணையைம்பது

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

பண்புள்ளி நின்ற பெரியார் பயனெரிய
வண்புள்ளி மாறன் பொறையனார் புணர்த்தியாத்த
வைந்திணை யைம்பது மார்வத்தி னோதாதார்
செந்தமிழ் சேரா தவர்.

---

## ௧.—முல்லை.

௧ மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து
செல்வக் கடம்பமர்ந்தான் வேன்மின்னி—நல்லா
யியங்கெயி லெய்தவன் றார்பூப்ப வீதோ
மயங்கி வலனேருங் கார்.

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

**இதன்பொருள்.** மல்லரைவென்றவன் நிறம்போல இருளைச்செய்தெழுந்து செல்வக் கடப்பந்தாரினை விரும்பினான் வேல்போல மின்னி விசும்பின் இயங்குகின்ற முப்புரங்களை யெய்தவன் கொன்றைத்தார் பூப்ப மிடைந்து எழாநின்றது நல்லாய்! இக்கார் என்றவாறு. (௧)

---

* இஃது சங்கத்தாராற் தொகுக்கப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

உ. *அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றாழ்ந்து—பணிமொழி
கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்
பீர்நீர்மை கொண்டன தோள்.

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்) அழகிய நிறத்தையுடைய மயில்களகவ முழங்கி நீலமணி நிறத்தையுடைய மாமலையின்மேற் படிந்து, மெல்லிய மொழியையுடையாய்! கார்காலத்துத் தன்மையைக் கொண்ட மிக்க முகில்களைக் காணுந்தோறும் என்றோள்கள் பீரின் தன்மையைக் கொண்டன எ-று. (உ)

ங. மின்னு முழக்கு மிடியுமற் றின்ன
கொலைப்படை சாலப் பரப்பிய முல்லை
முகைவென்ற பல்லினா யில்லையோ மற்று
நமர்சென்ற நாட்டுளிக் கார்.

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

(இ-ள்) நமர்சென்ற நாட்டின்கண் மின்னும் முழக்கும் இடியும் என்றுசொல்லப்பட்ட இக்கொலைப் படைகளை சாலப் பரப்புதற்கு இக்காரில்லையோ முல்லை முகை வென்ற பல்லினாய்! எ-று. (ங)

ச. உள்ளார்கொல் காதல ரொண்டொடி நந்நிறம்
வள்ளார் முரசின் குரல்போ லிடித்துரறி
நல்லார் மனங்கவரத் தோன்றிப் பணிமொழியைக்
கொல்வாட்குக் கூர்ந்ததிக் கார்.

இதுவுமது.

(இ-ள்) நந்நிறத்தைக் காதலர் உள்ளார்கொல்லோ ஒண்டொடி! தோலார்ந்த முரசின் குரலினைபோல இடித்து முழங்கித் தங்கொழுநரைப்

---

* இச்செய்யுளைப் பருவங்கண்டு பெருமகள் புலம்பற்கு உதாரணங் காட்டுவர் அகப்பொருள்விளக்கவுரைகாரர். (களவியல், ௩௩.)

பிரிந்த நல்லார் மனங்கவலும்படி தோன்றி நங்காதலர் சொன்ன இன்சொல்லைச் சிதைப்பதுபோல மிக்கது இக்கார் எ-று. (ச)

ரு கோடுயர் தோற்ற மலைமே லிருள்கொண்மூக்
கூடி நிரந்து தலைபிணங்கி—மோடி
வளிகலந்த வந்துறைக்கும் வானங்காண் தோறுந்
துளிகலந்து வீழ்தருங் கண்.

இதுவுமது.

(இ-ள்) குவடுகளுயர்ந்த தோற்றத்தையுடைய மலைகண்மேற் பெருமுகில்கள் திரண்டு மிடைந்து ஒன்றோடொன்று பிணங்கியோடிக் காற்றொடு கலந்து பெய்கின்ற விசும்பு காணுந்தோறும் துளிகலந்து பெய்யாநின்றன என்கண்கள் எ-று. (ரு)

சு முல்லை நறுமலர் ஊதி யிருந்தும்பி
செல்சார் வுடையார்க் கினியவாய்—நல்லாய்மற்
றியாருமின் னெஞ்சினே மாகி யுறைவேமை
யீரு மிருண்மாலை வந்து.

இதுவுமது.

(இ-ள்) நல்லாய்! இருந்தும்பி முல்லைநறுமலரை ஊதுதலாற் றமக்குச் செல்சார்வாகிய கொழுநரையுடையார்க்கு இன்பத்தைச் செய்வனவாய் யாருந் துணையில்லாத நெஞ்சினேமாகி உறைவேமை இருண்மாலை வந்து ஈராநின்றது எ-று. (சு)

எ தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
யாரான்பி னாய னுவந்தூதுஞ்—சீர்சால்
சிறுகுழ லோசை செறிதொடி வேல்கொண்
டெறிவது போலு மெனக்கு.

இதுவுமது.

(இ-ள்) தேரினையுடைய பகலவன் மலையின்கண் மறைந்த செக்கர்கொண்ட புன்மாலையின்கண் அரிய ஆனிரையின் பின்னே ஆயன் விரும்பி யூதுஞ் சீரமைந்த சிறுகுழல் இன்னோசை, வேல்கொண்டு எறிவது போலாநின்றது செறிதொடி! எனக்கு எ-று. (எ)

௮ பிரிந்தவர் மேனிபோற் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோற் பொற்பத்—திருந்திழாய்
வானம் பொழியவும் வாரார்கொ லின்னாத
கானங் கடந்துசென் றார்.

இதுவுமது.

(இ-ள்) துணைவரைப் பிரிந்தார் மேனிபோலப் புற்கென்ற வள்ளிகள், துணைவரோடு பொருந்தியிருந்தார் மேனிபோலப் பொலிவு தோன்றும் வகை வானம் பொழியவும் வாரார்கொல்லோ, திருந்திழாய்! இன்னாத கானங்களைக் கடந்துசென்றார் எ-று. (௮)

௯ வருவர் வயங்கிழாய் வாளொண்க ணீர்கொண்
டுருகி யுடன்றழிய வேண்டா—தெரிதியேற்
பைங்கொடி முல்லை யவிழரும் பீன்றன
வம்ப மழையுறக் கேட்டு.

பருவமென்றழிந்த கிழத்தியைத் தோழி
பருவமன்றென்று வற்புறுத்தியது.

(இ-ள்) விளங்கிய இழைகளையுடையாய்! நங்காதலர் பருவம் வந்தால் வருவர்; வாளினை ஒக்கும் நின்கண்கள் நீர்கொள்ள நீயுருகி மாறுபட்டு அழியவேண்டா; ஆராய்வாயாயிற் றன்பருவமல்லாமையின் நிலையில்லாத முழக்கங் கேட்டுப் பைங்கொடி முல்லைகள் அவிழரும்பு ஈன்றனகாண் எ-று. (௯)

௧௦ நூனவின்ற பாகதேர் நொவ்விதாச் சென்றீக
தேனவின்ற கானத் தெழினோக்கித்—தானவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பா ணிலையுணர்கம் யாம்.

வினைமுற்றிய தலைமகன்
தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

(இ-ள்) நூல்பயின்ற பாகனே! நின்றேர் கடிதாகச் செல்வதாக; தேன் பயின்ற காட்டினது அழகை நோக்கித் தான்பயின்ற கற்பென்னுகின்ற தாளினைச் செறித்து உயிர்காத்துக் கவுளின்மிசைக் கையூன்றி நிற்பாளது நிலைமையை நாம்சென்று அறிவாம் எ-று. (௧௦)

முல்லை முடிந்தது.

## உ.—குறிஞ்சி.

கக பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலு
ணன்மலை நாட னலம்புனைய—மென்முலையாய்
போயின சின்னாள் புனத்து மறையினா
லேயினா ரின்றி யினிது.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி
தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது.

(இ-ள்) பொன்போன்ற பூங்கொத்தையுடைய வேங்கைகள் அழகு பெற்ற பூம்பொழிலின்கண் வந்து நன்மலைநாடன் நினது நலத்தினைப் புனையக் கழிந்தன சிலநாள்; புனத்தின்கட் களவினான் எதிர்ப்பட்டோ ரின்றி இடையூறின்றியே யினிதாக எ-று. (க)

கஉ பால்வரை வெற்ப வணங்குறா லேனல்
காவ லியற்கை யொழிந்தேம்யாந்—தூவருவி
பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும்
பாக்க மிதுவெம மிடம்.

பகற்குறிவந்து பெயர்கின்ற தலைமகனைக்
கண்ணுற்றுத் தோழி செறிப்பறிவுறீஇயது.

(இ-ள்) பெரிய குவடுகளையுடைய வெற்பனே! வளைந்த கதிர்களையுடைய பசுந்தினையைக் காத்தல் யாமொழிந்தேம்; தூவருவிகள் பூவின் கண்களைக் கழுவுகின்ற காட்டினை யுடைத்தாயப் பொன்விளையும் இப்பாக்கம் எம்முடைய இடமாதலான், நீயங்கே வரக்கூடின் வருவாயாக எ-று. (உ)

கங கானக நாடன் கலவானென் றோளென்று
மானேர்கண் ணாய் மயங்கினீ—நானங்
கலந்திழியு நன்மலைமேல் வாலருவி யாடப்
புலம்பு மகன்றுநில் லா.

சிறைப்புறத்தானாகத் தலைமகனை யியற்பழித்த
தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(இ-ள்) கானகநாடன் என்றோளைப் புணரானென்று சொல்லி, மான் போன்ற மதர்த்த கண்ணினையுடையாய்! அறிவு கெடா தொழிவாயாக;

பலநறுவிரைகளையுங் கலந்து இழியாநின்ற நன்மலையின்கண் உள்ள வாலிய அருவியையாட என்றோள்களின்கட் புலம்பும் நீங்கி நில்லாது எ-று. (௩)

க௪ புனைபூந் தழையல்குற் பொன்னன்னாய் சாரற்
றினைகாத் திருந்தேம்யா மாக—வினைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்பாட்டுத்
தாம்வினவ லுற்றதொன் றுண்டு.

தோழி தலைமகட்கு மெலிதாகச்
சொல்லிக் குறைநயப்புக்கூறியது.

(இ-ள்) செய்யப்பட்ட பூந்தழைகளான் அணியப்பட்ட அல்குலினையுடைய பொன்னன்னாய்! மலைச்சாரலின்கட் டினையைக் காத்து நாம் இருந்தேமாக, வினையை வாய்க்கச்செய்து ஒருமாவினவுவார்போல வந்தாரொருவர் நம்மாட்டுத் தாம் வினவலுற்ற பிறிதொன்று உண்டு எ-று. (௪)

க௫ * வேங்கை நறுமலர் வெற்பிடை யாங்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற்—றியாங்கணைத்தும்
பாய்ந்தருவி யாடினே மாகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் டாம்.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகத்
தோழி தாய்கேட்டதற்கு மறுமாற்றஞ் சொல்லுவாள்
போலப் படைத்துமொழிகிளவியான் வரைவுகடாயது.

(இ-ள்) வெற்பின்கண் வேங்கைமலரையுங் கொய்து நின்மகள் மாந்தளிர்மேனி வியர்த்தலான் அவ்விடத்து எல்லாவருவியும் பாய்ந்தாடினேமாகப் பணிமொழியையுடையாட்குச் சேயரிக்கண்டாம் சிவந்தன காண் எ-று. (௫)

க௬ கொடுவரி வேங்கை பிழைத்துக்கோட் பட்டு
மடிசெவி வேழ மிரீஇ—யடியோசை
யஞ்சி யொதுங்கு மதருள்ளி யாரிருட்
டுஞ்சா சுடர்த்தொடி கண்.

---

* இதனை "ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப், பொய்யென மாற்றி மெய்வழி கொடுப்பினும்" என்பதற்கு உதாரணங்காட்டுவர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கஎ, உக.)

இரவுக்குறிவந்து பெயருந் தலைமகனைக்
கண்ணுற்றுநின்ற தோழி வரைவுகடாயது.

(இ-ள்) கோள்வரி வேங்கையாற் கோட்பட்டுப் பிழைத்து மடிந்த செவியையுடைய வேழம் பிரிந்து தன்னடியோசையைப் புலி கேட்குமென்று அஞ்சி மெல்ல நடக்கும் வழியை நினைந்து, அங்குலின்கட் சுடர்த்தொடியையுடையாள் கண் துயிலா எ-று. (சு)

கஎ மஞ்சிவர் சோலை வளமலை நன்னாட
வெஞ்சாரல் நீவருதி யென்றெண்ணி—பஞ்சித்
திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாத
ருருவொடுங்கு முள்ளுருகி நின்று.

இதுவுமது.

(இ-ள்) முகில் படாநின்ற சோலையையுடைய வளமலைநாடனே! ஒருநாள் ஒழியாது இரவின்கண் நீ வாராநின்றாய் என்று எண்ணித், திருவொடுங்கு மென்சாயற் றேங்கோதை மாதர் அஞ்சி யுள்ளுருகி நின்று தன்மேனி மெலியாநின்றாள் எ-று. (எ)

கஅ *எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குர லேனல்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவ னெஞ்சத்துக் கொண்டு.

தோழி செறிப்பறிவுறீஇத் தலைமகனை வரைவுகடாயது.

(இ-ள்) காடெறிந்து எமர்தாமுழுத ஈர்ங்குரல் ஏனலின்கண் மறந்தாயினுங் கிளியினமும் நாங்களும் வாரோம்; கறங்கருவியினையுடைய மாமலை நாடனே! மடமொழியோடு நீ கொண்ட கேண்மையை நின்னெஞ்சத்துக் கொண்டு மறவாயாக எ-று. (அ)

கக †நெடுமலை நன்னாட நீள்வேல் துணையாக்
கடுவிசை வாலருவி நீந்தி—நடுவிரு

---

* இதனை "ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்" என்புழி எடுத்தோதினார் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கள, உ௩.) அகப்பொருள் விளக்க வுரைகாரரும் பாங்கி தலைமகனை முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றற்கு உதாரணங்காட்டுவர். (களவியல், ௯௰அ)

† இது இரவுக்குறி விலக்கியது என்றார் நச்சினார்க்கினியரும். (தொல், பொரு, கள, உ௩.)

னின்று வதர்வர வீர்ங்கோதை மாதரா
ளென்னாவா ளென்னுமென் னெஞ்சு.

தோழி இரவுக்குறியின்கண்
நெறிவிலக்கி வரைவுகடாயது.

(இ - ள்) நெடுமலை நன்றாடனே! நீள்வேலே துணையாகக் கடிய விசையையுடைய வாலருவியை நீந்தி, நடுவிருளின்கண் இன்னாத வழியின்கண் நீவர, ஈர்ங்கோதை மாதராள் எப்பெற்றியாவாளோ என்று தடுமாறுகிற்கும் என்னெஞ்சு எ-று. (௧௯)

௨௰ *வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட
தறியாண்மற் றன்னோ வணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய் வேலற் றரீஇ
வெறியோ டலம்வரு மாய்.

தலைமகள் தோழிக்கு அறத்தொடுநின்று
வெறிவிலக்கவேண்டும் உள்ளத்தாளாய்ச் சொல்லியது.

(இ - ள்) விரைகமழாநின்ற வெற்பன் எனதுமெய்யின்கண் உள்ள நீர்மையைக் கொண்டது அறியாளாய், அந்தோ தெய்வம் என்னை வருத்திற்று என்று வேலனைத் தந்து மறியை யறுத்து உதிரத்தைத் தூவி வெறியோடே வருந்தாநின்றாள் அன்னை எ-று. (௨௰)

குறிஞ்சி முடிந்தது.

---

## ௩.—மருதம்.

௨௧ கொண்டுழிப் பண்டார் விலைபொரீஇக் ‡ கொற்சேரி
நுண்டுளைத் துன்னூசி விற்பாரி—னென்றாலும்
வேறல்லை பாணா வியலூரன் வாய்மொழியைத்
தேற வெமக்குரைப்பாய் நீ.

பாணற்குத் தலைமகள் வாயின்மறுத்தது.

---

* இது வெறியச்சுறுத்தியது என்பர் நச்சினார்க்கினியர். (தொல், பொரு, கள, ௨௩.) அகப்பொருள்விளக்கவுரைகாரரும் வெறிவிலக்கிற்கு உதாரணம் காட்டுவர். (களவியல், ௪௮)

‡ "வைகொண்ட ஊசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப், பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை யாத்தின்னி போந்ததுவே" என்றார் திருச்சிற்றம்பலக்கோவையிலும். (௩௮௯)

(இ - ள்) பண்டங் கொண்ட விலையை வேறுபடுத்துக் கொற்சேரியின் கண் நண்ணிய துளையையுடைய ஊசியை விற்றுத்திரிவாரின் யாதா லும் வேறல்ல; பாண! வியலூரன் வாய்மொழியைத் தெளிய எமக்கு உரைக்கின்ற நீ எ-று. (க)

உஉ போதார்வண் டூதும் புனல்வய லூரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே—நீதா
னறிவயர்ந் தெம்மில்லு ளென்செய்ய வந்தாய்
நெறியதுகா ணெங்கைய ரிற்கு.

இதுவுமது.

(இ - ள்) மலர்களை நுகராநின்ற வண்டுகள் ஊதும் புனல்வயலூரற் குத் தூதாய் உழல்கின்ற பாண்மகனே நீதான் அறிவு கலங்கி எங்கள் மனையுள் என்செய்யவந்தாய்? எங்கையர் மனைக்கு வழி அதுகாண் எ-று. (உ)

உங யாண ரகல்வய லூர னருளுதல்
பாண பரிந்துரைக்க வேண்டுமோ—மாண
வறிவ தறிவு மறிவினார் கேண்மை
நெறியே யுரையாதோ மற்று.

இதுவுமது.

(இ - ள்) வளமையுடைய அகல்வயலூரன் எமக்கு அருளுடையன் என்ப தனைப், பாணனே! நீ காதலித்து உரைக்க வேண்டுமோ? மாட்சிப்பட அறியக்கடவதனையறியும் அறிவினையுடையார் செய்யும் நட்புநெறியை அவர் அருளுடைமையே உரையாதோ? எ-று. (ங)

உச கோலச் சிறுகுருகின் குத்தஞ்சி யிர்வாளை
நீலத்துப் புக்கொளிக்கு மூரற்கு—மேலெலாஞ்
சார்தற்குச் சந்தனச்சாந் தாயினே மிப்பருவங்
காரத்தின் வெய்யவென் றாள்.

இதுவுமது.

(இ - ள்) அழகிய சிறுகுருகின் குத்தினையஞ்சிக் குளிர்ந்தவாளை நீலமல ரின்கட் புக்கு ஒளிக்கும் ஊரினையுடையாற்குப், பண்டெல்லாம் புணர்தற்

குச் சந்தனக்குழம்பாயினேம்; இக்காலம் புண்ணிற்கு இடும் காரம் போல வெய்யவாம் எம்முடைய தோள் எ-று. (௪)

உரு அழலவிழ் தாமரை யாய்வய லூரன்
விழைதகு மார்ப முறுநோய்—விழையிற்
குழலுங் குடுமியென் பாலகன் கூறு
மழலைவாய்க் கட்டுரை யால்.

வாயில்வேண்டிச் சென்றார்க்குத்
தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) அழல்போல அவிழுந் தாமரைகளையுடைய ஆய்வயலூரனுடைய கண்டார் விழையப்பட்ட மார்பம் தன்புறுநிற்கும்; குழலுங் குடுமியென் பாலகன் கூறும் மழலைவாய்க் கட்டுரையான் எம்மைவிரும்பிப் புணருமாயின் எ-று. (௫)

உ௬ பெய்வளைக் கையாய் பெருநகை யாகின்றே
செய்வய லூரன் வதுவை விழவியம்பக்
கைபுனை தேரேறிச் செல்வானைச் சென்றிவ
னெய்தி யிடருற்ற வாறு.

புதல்வனை முனிந்து தலைமகண் மறுத்தாளைப் போலத்
தோழிக்கு வாயினேர்ந்தது.

(இ-ள்) பெய்வளையினையுடைய கையாய்! எனக்குப் பெரிய நகையாகாநின்றது; செய்த வயல்களையுடைய ஊரன், பரத்தையர் புதுமணங்களின் உள்ள முழவு ஒலித்தலாற் கைபுனை தேரேறிச் செல்வானை இப்புதல்வன் கண்டு சென்று எய்த, அவ்வூரன் புதுமணம் புணரப் பெறாது இடருற்றவாறு எ-று. (௬)

உ௭ தண்வய லூரற் புலக்குந் தகையமோ
நுண்ணறல் போல நுணங்கிய வைங்கூந்தல்
வெண்மரற் போல நிறந்திரிந்து வேறாய
வண்ண முடையோமற் றியாம்.

வாயில் வேண்டிச் சென்றார்க்குத்
தலைமகள் வாயின்மறுத்தது.

(இ-ள்) தண்வயல் ஊரனை ஊடுந் தகையமோ? நுண்ணிய அறல் மணற்

போலும் நுணுகிய ஐவகைப்பட்ட கூந்தல் வெள்ளை மார்போலத் தன்னிறந் திரிந்து வேறுபட்ட நிறத்தையுடையேம் ஆதலான் எ-று. (எ)

உஅ ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு
வல்லென்ற தென்னெஞ்சம் வாட்கண்ணாய்—நில்லென்று
தேக்கற்றாங் கென்மகன் றானிற்ப வென்னானு
நோக்கான்றே ரூர்ந்தது கண்டு.

தலைமகள் தோழிக்கு வாயின்மறுத்தது.

(இ - ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறவோசையானும் ஒல்லென்றொலிக்கும் ஊரற்கு என்னெஞ்சம் நெகிழாது வலிதாயிற்று; வாட்கண்ணாய்! புதல்வன் தன்னை விரும்பிநிற்பக் கண்டுவைத்துப் பாகனை நில்லென்று சொல்லாதே என் புதல்வனையும் பின்பாராதே தேரூர்ந்து பரத்தையர் மனைக்குச் சென்றது கண்டு எ-று. (அ)

உகூ ஒல்லென் னொலிபுன லூரன் வியன்மார்பம்
புல்லேன்யா னென்பேன் புனையிழையாய்—புல்லே
னெனக்கோர் குறிப்பு முடையனோ வூரன்
றனக்கேவல் செய்தொழுகு வேன்.

ஆற்றாமையே வாயிலாகப்புக்க தலைமகன் புணர்ந்து
நீங்கியபின்பு சென்ற தோழிக்குத்
தலைமகள் சொல்லியது.

(இ - ள்) ஒலிபுனலையுடைத்தாய்ப் பிறவோசையான் ஒல்லென்னும் ஊரனுடைய அகன்ற மார்பத்தினை யான் முயங்கேன் என்றுசொல்லி அவனைக் காணுதமுன் நினைத்திருப்பேன்; புனையிழையாய்! அவனைக்கண்டபின் முயங்கேனுதற்கு எனக்கெனப் பெற்ற கருமம் உடையேனோ? ஊரன்றனக்கு ஏவல் செய்து ஒழுகுவேன் ஆதலான் எ-று. (க)

குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதா—மொளியிழா
யூடி யிருப்பினு மூரன் னறுமேனி
கூட லினிதா மெனக்கு.

இதுவுமது.

(இ-ள்) குளிருங் காலத்தேயாயினும் தென்றற்காற்று எறியின் உடம்பிற்கு இனிதாம்; அதுபோல, ஒளியிழாய்! யான் அவனைப் புலந்திருந்தேன் ஆயினும், அவ்வூரன் அழகிய நாற்றத்தினையுடைய மேனியைக்கூடுதல் இனிதாம் எனக்கு ' எ-று. (௰)

மருதம் முடிந்தது.

---

## ௪.—பாலை.

௩௧ * உதிரந் துவரிய வேங்கை யுகிர்போ
லெதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—வெதிருநர்க்
கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்
துன்பங் கலந்தழியு நெஞ்சு.

பருவங்கண்டழிந்த தலைமகள்
தோழிக்குச் சொல்லியது.

(இ-ள்) உதிரத்தையளைந்து துவரிய புலியினது உகிர்போலப் பருவத்தையெதிர்ந்து முருக்குக்கள் அரும்ப, ஈர்ந்தண் முகில் நீங்கக், காதலர்

---

* இவ்வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தமைக்கிலக்கணம், "வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும், ஐஞ்சீ ரடியு முளவென மொழிப" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளை விரவியும், ஆசிரியம் விரவியும் என்றது என்னையெனின்—அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு" எனவும், "கண்டகம பற்றிக் கடக மணிதுளங்க, வொண்செங் குருதியி னோடு கிடப்பதே—கெண்டிக், கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னா, ளழுதகண் ணீர்துடைத்த கை" என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது" எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர், "வெண்பாவோடுங் கலிப்பாவோடும் விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர் புலவர் எ-று." எனவும், " கண்டகம் பற்றி..............கை " " கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத், தடங்கட்டடங்கட்டளிரியல்கொள்ளான்—கிடங்கில், வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா, யிளையாடன் கண்ணொக்கு மென்று' இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடி வந்தவாறுகாண்க" எனவும் கூறியவாற்றானும் உணர்க.

தம்முட்டலைப்பட்டார்க்கு இன்பத்தைக் கொடுத்த இளவேனிலைக் காணுந் தோறுந் துன்பத்தோடு புணர்ந்து அழியாநின்றது என்னெஞ்சு. எ-று. (௧)

௬௨ விலங்கல் விளங்கிழாய் செல்வாரோ வல்ல
ரழற்பட் டசைந்த பிடியை—யெழிற்களிறு
கற்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்
டுச்சி யொழுக்குஞ் சுரம்.

தலைமகனது பிரிவுக்குறிப்பறிந்தாற்றாளாய
தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

(இ - ள்) அவர் செலவினை விலங்காதொழிக ; விளங்கிய இழையினையுடையாய் ! செல்லமாட்டார் ; காட்டழற்பட்டு வருந்திய பிடியினை அதனது எழிற்களிறு கற்சுனைச் சேற்றிடையுள்ள சின்னீரைத் தன் கையாலே கொண்டு அப்பிடியின் உச்சியின்கண் ஒழுக்குஞ் சுரத்தை எ-று. (௨)

௬௩ பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியு
மாயமு மொன்று மிவைநினையாள்—பால்போலு
மாய்ந்த மொழியினாள் செல்லுங்கொல் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉங் காடு.

மகட்போக்கியநற்றாய் கவன்று சொல்லியது.

(இ - ள்) பாவையையும், பந்தையும், பவளம்போன்ற வாயையுடைய பசுங்கிளியையும், ஆயத்தையும் இவற்றை ஒன்றும் நினையாளாய்ப், பால் போலும் இனமொழியையுடையாள், தன் காதலன்பின் செல்லுங்கொல்லோ ! கனன்று பகலோன் சுடுகின்ற காட்டினை எ-று. (௩)

௬௪ கோட்டமை வல்விற் கொலைபிரியா வன்கண்ண
ராட்டிவிட் டாறலைக்கு மத்தம் பலநீந்தி
வேட்ட முனைவயிற் சேறிரோ வையநீர்
வாட்டடங்கண் மாதரை நீத்து.

தோழி தலைமகனைச் செலவழுங்கியது.

(இ - ள்) கோட்டுகின்ற மூங்கில்விற்கொலையை இடையறாத வன்கண்மையையுடையார் ஆறலைத்து ஓட்டி வழியின்கண் நின்று அலைக்குங் கடறுகள் பலவற்றையு நீந்தி, வேட்டினையுடைய வெம்முனையின்கட் செல்வீரோ? ஐய ! நீர் வாட்டடங்கண் மாதரைத் துறந்து எ-று. (௪)

௩௫ கொடுவி லெயினர்தங் கொல்படையால் வீழ்ந்த
தடிதினை மாந்திய பேஎய்—நடுகல்
விரிநிழற் கண்படுக்கும் வெங்கான மென்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்.

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த காலத்து
ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலை
மகள் ஆற்றுவலென்பதுபட மொழிந்தது.

(இ - ள்) கோட்டிய வில்லினையுடைய வேட்டுவர் தங்கொல்படையானே வீழ்ந்த தசையையும் தினைத்தையுந் தின்ற பேய்கள், போரின்கட்பட்டார் பெயர்பொறித்து நட்ட கல்லின் விரிநிழற்றுயிலும் வெய்ய காடென்று சொல்லுவர்; தோழி! பொருள் விரும்பினார் போகிய கடறு எ-று. (௫)

௩௬ கடிதோடும் வெண்டேரை நீரமென் றெண்ணிப்
பிடியோ டொருங்கோடித் தாள்பிணங்கி வீழும்
வெடியோடும் வெங்கானஞ் சேர்வார்கொ னல்லாய்
தொடியோடி வீழத் துறந்து.

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

(இ - ள்) விரைந்தோடும் பேய்த்தேரை நீரமென்று கருதிக் களிறுகள் பிடியோடே கூட ஓடித் தாள்ஒய்ந்து பிணங்கிவீழும் பிளவோடிய வெங்கானத்தைச் சென்று நங்காதலர் சேர்வார்கொல்லோ? நல்லாய்! நங்கையிற் றொடி யோடிவீழத் துறந்து; எ-று. (௬)

௩௭ தோழியர் சூழத் துறைமுன்றி லாடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கா—றாழாது
கல்லத ரத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லளோ மாதர் நடை.

உடன்போய தலைமகட்கு நற்றாய்
கவன்றுரைத்தது.

(இ - ள்) தோழியர் சுற்ற முற்றத்திற்றுறையின் விளையாடும்பொழுதும் வீழ்பவளேபோலத் தளருங் கால்கள் ஒய்ந்து தாழாதே கல்வழியையுடைய அத்தத்துத் தன் கொழுநன்பின் போதலைவல்லளோ? காதலையுடையாள் நடை எ-று. (௭)

௩௮ சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி.

பிரிவின்கண் ஆற்றாளாயின தலைமகளைத்
தோழியாற்றுவித்தது.

(இ-ள்) சுனையின்கண் உள்ள சிறியநீரைப் பிணைக்கு உண்ண நிரம்பாது என்று எண்ணிப் பிணைமான் இனிதாக உண்ணவேண்டிக், கலையாகிய மாத் தனது கள்ளத்தினானே பொய்யே உறுஞ்சும் சுரமென்று சொல்லுவர்; நங்காதலர் தாம் அகத்தினாற் போயினநெறி எ-று. (அ)

௩௯ மடவைகா ணன்னெஞ்சே மாண்பொருண்மாட் டோடப்
புடைபெயர் போழ்தத்து மாற்றாள்—படர்கூர்ந்து
விம்மி யுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ
நம்மிற் பிரிந்த விடத்து.

தலைமகன் பொருள்வலித்த நெஞ்சிற்குச்
சொல்லிச் செலவழுங்கியது.

(இ-ள்) அறியாய்காண், மிக்கநெஞ்சே! மாட்சிமைப்பட்ட பொருளின் மாட்டுச் சேறலான், முயங்கி நாம் புடைபெயருங்காலத்தும் ஆற்றமாட்டாளாய்த் துன்பமிக்கு விம்மி உயிராநின்ற விளங்கிழையாள் ஆற்றவல்லளோ? நம்மை நீங்கியவிடத்து எ-று. (௯)

௪௰ இன்றல்கு லீர்ம்படையு ளீர்ங்கோதை தோடுணையா
நன்கு வதிந்தனை நன்னெஞ்சே நாளைநாங்
குன்றத ரத்த மிறந்து தமியமா
யென்கொலோ சேக்கு மிடம்.

இதுவுமது.

(இ-ள்) இன்று இரவின்கட் குளிர்ந்த சேக்கையுள் ஈர்ங்கோதையையுடையாள் தோள் நமக்குத் துணையாக மிகவுந்தங்கினை; நன்னெஞ்சே! இவ்வின்பத்தைவிட்டு நாளையிரவின்கண் யாம் மலைவழியே யிறந்து தமியேமாய் எவ்விடந் தங்குமிடம்? எ-று. (௰)

பாலை முடிந்தது.

# ௫.—நெய்தல்.

௪௧ தெண்கடற் சேர்ப்பன் பிரியப் புலம்படைந்
தொண்டடங்கண் டுஞ்சற்க வொள்ளிழாய்—நண்படைந்த
சேவலுந் தன்னருகிற் சேக்குமா லென்கொலோ
பூந்தலை யன்றில் புலம்பு.

அல்ல குறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய்த்
தோழி தலைமகட்குச் சொல்லியது.

(இ-ள்) தெண்கடற் சேர்ப்பன் பிரிதலாற் றனிமையையடைந்து நின்னுடைய ஒள்ளியகண் துயிலாதொழிக; ஒள்ளிய இழைகளையுடையாய்! நண்பினையடைந்த சேவலும் தன்னருகே உறையாநின்றதாதலான், என்னைகொல்லோ? செம்பூப்போலுஞ் சூட்டினையுடைய பெடையன்றில் புலம்புதல் எ-று. (௧)

௪௨ கொடுந்தா ளலவ குறையா மிரப்பே
பொடுங்கா வொலிகடற் சேர்ப்ப—னெடுந்தேர்
கடந்த வழியையெங் கண்ணுறக் காண
நடந்து சிதையாதி நீ.

காமமிக்க கழிபடர்கிளவி.

(இ-ள்) கோடியிருந்த தாளினையுடைய அலவனே! ஒரு காரியம் நின்னை யிரப்பேம்; ஒலியாநின்ற அடங்காத கடற்சேர்ப்பன் நெடுந்தேர் போயின வழியை எம்முடைய கண் நிரம்பக்காணும்வகை அதன்மேல் நடந்து அழியாதொழிவாயாக எ-று. (௨)

௪௩ *பொரிப்புறப் பல்லிச் சினையீன்ற புன்னை
வரிப்புற வார்பணன்மே லேறித்—தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் றாகல நல்குமே
லாழியாற் காணுமோ யாம்.

இதுவுமது.

* இதனைப், "பிரிந்த வழிக்கலங்கினும்" என்பதற்குதாரணங்காட்டுவர் நச்சினார்க்கினியர் (தொல், பொரு, கஎ, [illegible]) 20

(இ-ள்) பொரிந்த புறத்தையுடைய பல்லிமுட்டைபோல அரும்பினை யீன்ற புன்னைப்பூக்களையுடைய வரிப்பட்ட புறத்தினையுடைய உயர்ந்த மணற்குன்றின்மேல் ஏறியிருந்து, தெளிவுறத் தாழ்கடற் றண்சேர்ப்பனு டைய தாரகலத்தை நமக்கு நல்குமாயிற், * கூடல் இழைப்பாற் காண் பேம் யாம் எ-று. (௩)

௪௪ கொண்கன் பிரிந்த குளிர்பூம் பொழினோக்கி
யுண்கண் சிவப்ப வழுதே னொளிமுகங்
கண்டன்னை யெவ்வம்யா தென்னக் கடல்வந்தென்
வண்டல் சிதைத்தென் றேன்.

பகற்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து
மொழிகிளவியாற் றோழி தலைமகட்குச் சொல்லுவா
ளாய்ச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது.

(இ-ள்) நம்மை இற்செறிக்கையாற் கொண்கன் பிரிந்த குளிர்பூம்பொழிலை நோக்கி உண்கண் சிவப்ப அழுத என்னுடைய ஒளிமுகத்தைக்கண்டு அன்னை நினக்கு வந்த இடும்பை யாது என்னக் கடல்வந்து என்னுடைய விளையாட் டுச் சிற்றிலைச் சிதைத்தது என்று சொன்னேன்; எம்பெருமாட்டி! எ-று (௪)

௪௫ ஈர்ந்தண் பொழிலு ளிருங்கழித் தண்சேர்ப்பன்
சேர்ந்தென் செறிவளைத்தோள் பற்றித் தெளித்தமை
மாந்தளிர் மேனியாய் மன்ற விடுவனவோ
பூந்தண் பொழிலுட் குருகு.

தலைமகனைத் தோழி வரைவுகடாதற் பொருட்டுத்
தலைமகள் வரைவுவேட்டுச் சொல்லியது.

---

* இதனைச், "கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால், இரட் டைப்பட்டாற் கூடுகை; ஒற்றைப்பட்டாற் கூடாமையென்று ஸங்கேதம்" என நாச்சியார் திருமொழி உரையினும், (கூடற்றிருப்பதிகம்) "மணற்குன் றினீத்தகன்றார் வருகென், றாழிதிருத்திச் சுழிக்கணக்கோதி" எனத் திருச் சிற்றம்பலக்கோவையினும் (கஅசு) "வளைத்துக்கிடந்த வரிமணற்கூடலும்" என அம்பிகாபதிகோவையினும் (௩௨௨) வருவனவற்றான் உணர்க.

(இ - ள்) குளிர்ந்த தண்பொழிலின்கண் இருந்த பெரிய கழியையுடைய தண்சேர்ப்பன் புணர்ந்து என் செறிவளைத்தோள்பற்றி என்னைத் தெளிவித்த வஞ்சினத்தை, மாந்தளிர்மேனியாய்! மெய்யாக மறந்துவிட வல்லவோ? அப்பூந்தண்பொழிலுள் வாழுங் குருகுகள் எ-று. (ரு)

உசா ஓதந் தொகுந்த வொலிகடற் றண்முத்தம்
பேதை மடவார்தம் வண்டல் விளக்கயருங்
கானலஞ் சேர்ப்ப தகுவதோ வென்றோழி
தோணலந் தோற்பித்த னீ.

பகற்குறிவந்து புணர்ந்து நீங்குந் தலைமகனைக்
கண்ணுற்றுநின்று தோழி வரைவுகடாயது.

(இ - ள்) ஓதம் எறித்திரட்டிய ஒலிகடற் றண்முத்தங்களைப் பேதைமையுடைய மடவார் தம்வண்டற் சிறுமனைக்கு விளக்காக விருப்புச்செய்யும் கானலஞ் சேர்ப்பனே! நினக்குத் தகுவதொன்றோ? என்னுடைய தோழியுடைய தோள்களின் நலத்தை நீ தொலைவித்தல் எ-று. (சா)

உஎ பெருங்கட லுள்கலங்க நுண்வலை வீசி
யொருங்குடன் றன்னையார் தந்த கொழுமீ
னுணங்கல்புள் ளோப்பு மொளியிழை மாத
ரணங்காகு மாற்ற வெமக்கு.

தோழிக்குத் தலைமகன் சொல்லியது.
தோழற்குச் சொல்லியதூஉமாம்.

(இ - ள்) பெரிய கடல் உள்ளெல்லாங் கலங்க நுண்ணிய வலைகளாலே வீசி ஒருங்குடனே தமையன்மார் கொண்டுவந்த கொழுத்த மீன் உணங்கல்களைக் கவரும் புட்களை ஓப்புகின்ற ஒளியிழைமாதர் மிகவும் எமக்கு வருத்துந் தெய்வமாம் எ-று. (எ)

உஅ எக்க ரிடுமணன்மே லோதந் தரவந்த
வித்தில நின்றிமைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
மிக்க மிகுபுகழ் தாங்குபவோ தற்சேர்ந்தா
ரொற்கங் கடைப்பிடியா தார்.

தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

(இ-ள்) திரைவந்து இட்ட இளமணன்மேல் ஓதம் தாவந்த முத்தங்கள் நின்று விளங்காநின்ற நீண்ட கழியினையுடைய தண்சேர்ப்பனே! உலகத்தின்கண் விளங்கிய திருபுகழைத் தாங்கவல்லரோ? தம்மைச் சேர்ந்தாருடைய தளர்ச்சியைக் கடைப்பிடித்துத் தீராதார் எ-று. (௮)

௪௯ * கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப்—புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி.

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன்
சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

(இ-ள்) கொடிய முள்ளையுடைய மடற்றாழையினது மொட்டவிழ்ந்த ஒள்ளிய பூக்கள் நடுவுள்ள சோற்றால் வெண்ணெய்போலத் தோன்றி மருங்கெல்லாம் தெய்வமணம்போலக் கமழாநின்ற தெளிந்த கடற்றண்சேர்ப்பன் நம்மாற் றெளிக்கப்படாத குறியைச் செய்தான்; ஆதலால் அல்ல குறிப்பட்டேம் எ-று. (௯)

௫௰ ‡ அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுருகு நெஞ்சினே னாய்.

இதுவுமது.

(இ-ள்) நிலத்தைச் சூழ்ந்த கடற்றண்சேர்ப்பன் தேர்பூண்ட பரிமா அணிந்த மணியரவம் என்று கருதிச் சென்றேன்; கனிகளை விரும்புகின்ற புள்ளரவங்களைக் கேட்டு மணியரவம் அன்று என்று போந்தேன்; ஒளியிழாய்! உள்ளுருகும் நெஞ்சினேனாகி எ-று. (௰)

நெய்தல் முடிந்தது.

ஐந்திணையைம்பது முற்றிற்று.

---

* இது "பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பியது" எனக் கொள்வர் அகப்பொருள் விளக்க உரைகாரர். (களவியல், ௪௪.)

‡ இஃது "தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்கு உணர்த்தியது" எனக்கொள்வர் அகப்பொருள் விளக்க உரைகாரர் (ஷை ஷை.)

# ஐந்திணையைம்பது.

## செய்யுண் முதற்குறிப்பு அகராதி.

---


அணிகடற்றண் - ௫௰

அணிநிறமஞ்ஞை - ௨

அழலவிழ்தாமரை - ௨௫

இன்றல்கலீர்ம் - ௪௰

ஈர்ந்தண்பொழி - ௪௫

உதிரந்துவரிய - ௩௧

உள்ளார்கொல் - ௪

எக்கரிடுமணன் - ௪௮

எறிசெதமர்தாழு - ௧௮

ஒல்லென்றொலிக் - ௨௮

ஒல்லென்றொலிபு - ௨௯

ஓதந்தொகுத்த - ௪௬

கடிதோடுவெண் - ௩௬

கானகநாடன் - ௧௩

குளிரும்பருவத்தே - ௩௰

கொடுந்தாளலவ - ௪௨

கொடுமுண்மடற் - ௪௯

கொடுவரிவேங்கை - ௧௬

கொடுவிலெயினர் - ௩௫

கொண்கன்பிரிந்த - ௪௪

கொண்டுழிப்பண் - ௨௧

கோடுயர்தோற்ற - ௫

கோட்டமைவில்விற் - ௩௪

கோலச்சிறுகுரு - ௨௪

சுனைவாய்ச்சிறு - ௩௮

தண்வயலூரற் - ௨௭

தெண்கடற்சேர்ப்பன் - ௪௧

தேரோன்மலை - ௭

தோழி!ர்சூழத் - ௩௭

நூனவின்றபாக - ௧௰

நெடுமலைநன்றோட - ௧௯

பாவையும்பந்தும் - ௩௩

பிரிந்தவர்மேனி - ௮

புனைபூந்தழையல் - ௧௪

பெய்வளைக்கையாய் - ௨௬

பெருங்கடலுள்கலங் - ௪௭

பொரிப்புறப்பல்லி - ௪௩

பொன்னிணர்வேங்கை - ௧௧

போதார்வண்டூதும் - ௨௨

மஞ்சிவர்சோலை - ௧௭

மடலைகாணன் - ௩௯

மல்லர்க்கடந்தான் - ௧

மால்வரைவெற்ப - ௧௨

மின்னுமுழக்கு - ௩

முல்லைநறுமல - ௬

யாணரகல்வய - ௨௩

வருவர்வயங்கிழாய் - ௯

விலங்கல்விளங்கி - ௩௨

வெறிகமழ்வெற்ப - ௨௰

வேங்கைநறுமலர் - ௧௫

# அரும்பத அகராதி.

[எண்கள் பாட்டெண்கள்.]

அகவல் - அழைத்தல், ௨.
அசைதல் - வருந்துதல், ௩௨.
அணங்கிற்று - வருத்திற்று, ௨0.
அணங்கு - தெய்வம், ௨0, வருத்துந்தெய்வம், ௪௭.
அணி - அழகு, ௨.
அதர் - வழி, ௪௬, ௨0.
அத்தம் - கடறு, ௩௪. வழி, ௩௭.
அமர்தல் - விரும்புதல், ௧. பொலுதல், ௧௩.
அமை - மூங்கில், ௩௪.
அயர்தல் - கலங்குதல், ௨௨.
அலம்வருதல் - வருந்தாநிற்றல், ௨0.
அல்கல் - இரவு, ௪0.
அறல் - அறன்மணல், ௨௭.
அன்னோ - அந்தோ, ௨0.
ஆடுதல் - விளையாடுதல், ௩௭.
ஆர - நிரம்ப, ௪௨.
ஆமான் - அரிய ஆனிரை, ௭.
ஆரிருள் - கங்குல், ௧௬.
ஆர்தல் - நுகருதல், ௨௨.
ஆழி - கூடலிழைப்பு, ௪௩.
இணர் - பூங்கொத்து, ௧௪.
இயம்புதல் - ஒலித்தல், ௨௫.
இரங்குதல் - முழங்குதல், ௨.
இரீஇ - பிரிந்து, ௧௯.
இருமை - பெருமை, ௫.
இல் - மனை, ௨௨.
இவர்தல் - படர்தல், ௧௭.
இழுது - வெண்ணெய், ௪௯.
ஈர்த்தல் - அறுத்தல், ௨0.
ஈர்ம்படை - குளிர்ந்த சேக்கை, ௪0.
உடன்று - மாறுபட்டு, ௯.
உணர்கம் - அறிவாம், ௧0.
உரறி - முழங்கி, ௪.
உருவொடுங்குதல் - மேனி மெலியாநிற்றல், ௧௭.
உவத்தல் - விரும்புதல், ௭.
உள்ளுதல் - நினைத்தல், ௧௬.
உறைக்கும் - பெய்கின்ற, ௫.
ஊச்சுதல் - உமுஞ்சுதல், ௩௮.
எக்கரிடுமணல் - திரைகொண்டிட்ட இளமணல், ௪௮.
எஞ்சாமை - ஒழியாமை, ௧௭.
எதிரி - எதிர்ந்து, ௩0.
எதிருதல் - தம்முட்டலைப்படுதல், ௩௧.
எயினர் - வேட்டுவர், ௩௫.
எய்தாது - நிரம்பாது, ௩௮.
எவ்வம் - இடும்பை, ௪௪.
எழில் - அழகு, ௧0.
ஏக்கற்று - விரும்பி, ௨௮.
ஏயினோர் - எதிர்ப்பட்டோர், ௧௧.
ஏனல் - பசுந்தினை, ௧௨.
ஐங்கூந்தல் - ஐவகைப்பட்ட கூந்தல், ௨௭.
ஒடுங்குதல் - அடங்குதல், ௪௨.
ஒதுங்குதல் - மெல்லநடத்தல், ௧௬.
ஒற்கம் - தளர்ச்சி, ௪௮.
ஒன்றானும் - யாதானும், ௨௧.
கடத்தல் - வெல்லுதல், ௧.
கடப்பு - கடப்பந்தார், ௧.
கடிது - விரைந்து, ௩௬.
கண்படுத்தல் - துயிலுதல், ௩௫.
கலி - மிக்க, ௨.
கல்லதர் - கல்வழி, ௩௭.
கவினுறுதல் - அழகுபெறுதல், ௧௧.
கழூஉம் - அழூஉங்குறை, ௧௨.
காண்டொறும் - காணுந்தோறும், ௯, ௩௧.
காய்ந்து - சினந்து, ௩௩.
காரம் - புண்ணிற்கிடுங்காரம், ௨௪.
கார் - கார்காலம், ௨. முகில், ௩௧.
கானம் - காடு, ௩௫.
கான் - காடு, ௧0.
குரல் - கதிர், ௧௨.
குறை - காரியம், ௪௨.
குன்றதரத்தம் - மலைவழி, ௪0.
கூம்பு - மொட்டு, ௪௧.
கூர்தல் - மிகுதல், ௪.
கேண்மை - நட்புநெறி, ௨௩.

கொடுந்தாள்-கோடியிருந்ததாள், ௪௨.
கொடுவில் - கோட்டியவில், ௩௫.
கொண்மூ - முகில்கள், ௫.
கொல்வாங்கு - சிதைப்பதுபோல, ௪.
கோடு - குவடு, ௫.
கோலம் - அழகு, ௨௪.
சந்தனச்சாந்து - சந்தனக்குழம்பு, ௨௪.
சார்தல் - புணர்தல், ௨௪.
சாலுதல் - அமைதல், ௭.
சால் - நிரம்ப, ௩.
சிதையாதி - அழியாதொழிவாயாக, [௪௨.
சினை - முட்டை, ௪௩.
சுரம் - கடறு, ௩௫.
சூழ்தல் - சுற்றுதல், ௩௧.
சென்றீக - செல்வதாக, ௧௦.
சேக்குதல் - தங்குதல், ௪௦, ௪௧.
சேத்தல் - சிவத்தல், ௧௫.
தடி - தசை, ௩௫.
தலைபிணக்குதல் - ஒன்றோடொன் [றுபிணங்குதல், ௫.
தன்னைமார் - தமையன்மார், ௪௭.
தருதல் - கொண்டுவருதல், ௪௭.
தாழ்தல் - படிதல், ௨.
தாள்பிணங்கி - தாளோயந்து, ௩௬.
தாள்வீழ்த்தல் - தாள்செறித்தல், ௧௦.
திரிதால் - உழலுதல், ௨௨.
துஞ்சுதல் - துயிலுதல், ௧௬.
துறைமுன்றில் [முன்றில் துறை] - முற்றத்திற்றுறை, ௩௭.
தெரிதல் - ஆராய்தல், ௯.
தெரிப்புற - தெளிவுற, ௪௩.
தெறூஉம் - சுடுகின்ற, ௩௩
தென்றல்வளி - தென்றற்காற்று, ௨௯
தேரோன் - தேரினையுடையபகல [வன், ௭.
தேற - தெளிய, ௨௪
தொகுத்தல் - திரட்டுதல், ௪௬.
தோற்பித்தல் - தொலைவித்தல், ௪௬.
நகையாகின்று - நகையாகாநின்றது, [௨௫
நடுகல் - போரின்கண் இறந்தார் [பெயர்பொறித்துநட்டகல், ௩௫.
நவிலுதல் - பயிலுதல், ௧௦
நன்கு - மிகவும், ௪௦.
நன்னெஞ்சு - மிக்கநெஞ்சு, ௩௯.
நனம் - கழுவிலைகள், ௧௩.
நித்திலம் - முத்தங்கள், ௪௮.
நிரந்து - மிடைந்து, ௫.

நீத்தல் - துறத்தல், ௩௪.
நீர்மை - தன்மை, ௨.
நீலம் - நீலமலர், ௨௪.
நுணங்குதல் - நுணுகுதல், ௨௭.
நெறி - வழி, ௨௨.
நொவ்விதா - கடிதாக, ௧௦.
படர்கூர்தல் - துன்பமிகுதல், ௩௯.
படர்தல் - போதல், ௩௮.
பணிமொழி - மெல்லியமொழி, ௨. [இன்சொல், ௪.
பரிதல் - காதலித்தல், ௨௩.
பருவம் - காலம், ௨௪.
பிரியா - இடையறாத, ௩௪.
புடை - மருங்கு, ௪௯.
புரிதல் - விரும்புதல், ௩௫
புலத்தல் - ஊடுதல், ௨௭.
புலம்படைதல் - தனிமையையடைத [ல், ௪௧.
புல்லுதல் - முயங்குதல், ௨௯.
புல்லெனல் - புற்கென்றல், ௮.
புறவு - காடு, ௧௨.
புனைதல் - செய்தல், ௧௪.
பூந்தலை அன்றில் செம்பூப்போலுஞ் [சூட்டினையுடைய அன்றில், ௪௧.
பொருநினர் - துணைவர், ௮.
பொற்ப - பொலிவுதோன்றும்வகை, [௮.
போதல் - கழிதல், ௧௧.
போது - மலர், ௨௨.
மஞ்சு - முகில், ௧௭.
மஞ்ஞை - மயில், ௨.
மடவைகாண் - அறியாய்காண், ௩௯.
மணி - நீலமணி, ௨.
மயங்குதல் - மிடைதல், ௧. அறிவு [கெடுதல், ௪௩.
மறவல் - மறவாயாக, ௧௮.
மறை - களவு, ௧௧.
மன்ற - மெய்யாக, ௪௫.
மாண - மாட்சிப்பட, ௨௩.
மாதர் - காதலையுடையாள், ௩௭.
மாந்துதல் - தின்னுதல், ௩௫.
மால் - பெருமை, ௧௨.
மேலெலாம் - பண்டெல்லாம், ௨௪.
யாணர் - வளமை, ௨௩.
யாய் - அன்னை, ௨௦
வணங்குதல் - வளைதல், ௧௨.
வண்டல் - விளையாட்டுச்சிற்றில், ௪௪, [௪௧
வண்ணம் - நிறம், ௨௭.

வதிதல் - தங்குதல், ௪௰.
வதுவை - பதுமணம், ௨௫.
வம்பு - நிலையின்மை, ௧.
வயங்குதல் - விளங்குதல், ௯.
வரை - குவடு, ௧௨.
வலனேரும் - எழாநின்றது, ௧.
வல்லென்றல் - ஒலிதாதல், ௨௮.
வளி - காற்று, ௫.
வள்வார்முரசு - தோலார்ந்தமுரசு, ௩.
வாய்த்து - வாய்க்கச்செய்து, ௧௪.
வார் - உயர்ந்த, ௪௩.
வானம் - முகில், ௨.
வியன் - அகன்ற, ௨௧.
விலங்கல் - விலங்காதொழிக, ௩௨.
விலையொரீஇ - விலையைவேறுபடுத்து, ௨௧.
வீழ்தருதல் - பெய்யாநிற்றல், ௫.
வெடி - பிளவு, ௩௬.
வெண்டேர் - பேய்த்தேர், ௩௬.
வெறி - விரை, ௨௰.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும். ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பு அணியிலக்கணங்கள் (விசாகப்பெருமாளையர் பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை) | 0 | 8 | 0 |
| 4. | வைத்திய சாரசங்கிரகம் ... ... | 3 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... | 2 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 3 | 0 | 0 |
| 7. | தோத்திரத்திரட்டு ... ... | 0 | 2 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி (உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்) ... ... | 6 | 0 | 0 |
| 9. | அபிதானசிந்தாமணி ... ... | 7 | 0 | 0 |
| | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு செலெக்ஷன் ... ... | 0 | 4 | 0 |

### செந்தமிழ்ப் பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| *2. | கைநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்)... | 0 | 3 | 0 |
| *3. | வளையாபதிச் செய்யுட்கள் | | | |
| *4. | புலவராற்றுப்படை (திருக்குருகூர் இரத்தின கவிராயர் இயற்றியது.) ... ... | 0 | 3 | 0 |
| *6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது உரையுடன் ... | 0 | 4 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | அநுமான விளக்கம் | ... ... | 0 | 4 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | ... ... | 0 | 1 | 0 |
| *11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | ... ... | 0 | 6 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | ... ... | 0 | 4 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | ... ... | 0 | 3 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம | ... ... | 0 | 3 | 0 |
| 16 | திருவாரூருலா | ... ... | 0 | 4 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் | ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்.) | ... ... | 0 | 6 | 0 |
| 22. | திருக்கலம்பகம் (ஷை) | ... ... | 0 | 3 | 0 |
| †23. | விக்கிரமசோழனுலா | ... ... | 0 | 2 | 0 |
| †24. | குருமொழிவினாவிடை | ... ... | 0 | 1 | 0 |
| †25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | ... | 0 | 1 | 0 |
| †26. | திருத்தணிகைத் திருவிருத்தம் | ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | ... ... | 0 | 3 | 0 |
| 28. | சந்திராலோகம் | ... ... | 0 | 2 | 0 |
| 29. | சோழவம்ச சரித்திரச்சுருக்கம் | ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | ... ... | 0 | 2 | 0 |
| 31. | பாண்டியம் | ... ... | 0 | 4 | 0 |

## வேறு பதிப்பு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மணிமேகலை | ... ... | 5 | 0 | 0 |
| 2. | பாரதச்சுருக்கவசனம் | ... ... | 1 | 8 | 0 |

* ஸ்டாக் இல்லை. † சீக்கிரம் வெளிவரும்.